1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது புகார் வந்தால் உங்கள் கையிலே வைத்துக் கொள்ளக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிட வேண்டும்.

வினா எண் 112 திரு. கே. பி. மணிவாசகம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

112—

பாப்பான்குளம் அரசுப் பண்ணை.

*வினா எண் 4715—திரு. கே. பி. மணிவாசகம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலை வட்டம் பாப்பான்குளத்தில் உள்ள அரசுப் பண்ணையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலை வட்டம் பாப்பான்குளத்தில் உள்ள அரசு விதைப்பண்ணையை நவீனப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவர் கிருஷ்ண பரமாத்மா, என்பார்கள். ஆனால் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களோ ''இல்லை'' என்று பதில் சொல்லி விட்டார்கள். இருந்தபோதிலும், ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற கருத்தின்படி, சிறப்பாகச் செயல்படுகின்ற நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனித அரசு, நிலவளம், நீர் வளம், மன வளம் மிக்க மக்கள் வாழ்ந்து வருகின்ற உடுமலைப் பேட்டை வட்டம், பாப்பான்குளத்தில் வருகின்ற நிதியாண்டிலாவது அரசுப் பண்ணையை நவீனப்படுத்த ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணனுக்கு என்று எந்த சக்தியுமே கிடையாது. (சிரிப்பு) புராணத்திலே கூட ஆதிபராசக்தியாக இருக்

கக்கூடிய சக்தியிடமிருந்துதான் கிருஷ்ணனுக்கே சக்தி வந்தது. எனவே பாப்பான்குளத்தில் உள்ள பண்ணைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு ஏற்கனவே வழங்கியிருக்கிறது. அந்தக் குளத்திற்குச் சொந்தமானது 41 ஏக்கர் நிலம்தான். அதற்குப் புதிதாக எந்தவித அபிவிருத்தியும் செய்யத் தேவையில்லை என் அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 113. திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

113—

ஆத்தூரில் தொழில் மையம்.

*வினா எண் 4293—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகாவாக இருப்பதால் ஒரு தொழில் மையம் அல்லது ஆட்டோ நகர் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூரில் 'ஆட்டோ நகர்' ஒன்று அமைக்க தொழில் முனைவோர்கள் 10 நபர்களாவது மாவட்டத் தொழில் மையங்களின் மூலம் முன்வரின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொழிற் பேட்டை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகளும், அதிகமான லாரிகளும், விவசாயத்தில் குறிப்பாக ஸ்பின் பருத்தி அதிகமான விளைச்சல் உள்ளதால் 300-க்கும் மேற்பட்ட டிராக்டர்களும் உள்ளதால் சிறு தொழில்கள் அதிகமாக உள்ள தளவாசல், ஆத்தூர் தொகுதிகள் அடங்கிய ஆத்தூர் வட்டத்தில் வருகின்ற நிதி ஆண்டிலாவது 'ஆட்டோ நகர்' தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழரசு, அமைச்சர் சொல்லியிருக்கிற பதிலில் 10 தொழில் முனைவோர்களாவது மாவட்டத் தொழில் மையத்தில் முன் வந்து பரிந்துரைப்பார்களானால் இப்படி தொழிற்பேட்டை அமைக்க ஆலோசிக்கப்